# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

## இணக்க அதிகாரி
## Compliance Officer

இது வங்கியின் (பிரதான முகாமையாளர் நிலை) ஒரு முக்கிய பதவியாகும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் சுற்றறிக்கை, அறிவுரைகள் மற்றும் உள்ளக தரநிலைகளின் பிரகாரம் ஒருங்கிணைந்த இடர் முகாமைக்குழுவின் ஊடாக (BIRMC) நேரகாலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவதன் மூலம் வங்கி அதன் வெளிவாரி ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் உள்ளக கொள்கைகளுக்கு அமைவானவை என உறுதிப்படுத்துதல், வங்கியின் இணக்க அபாயத்தைக் கண்டறிதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் வங்கியின் இணக்க முயற்சிகளை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்குப் பொறுப்பு கூறுதல்.

**தகைமைகள்**

வங்கியியல், வர்த்தகம், வணிகம், பொருளியல், கணக்கியல், சட்டம் அல்லது சட்டத்தரணி துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (ICASL)/ ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMAUK)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA UK) அல்லது AIB (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) நிறுவனத்தின் பகுதி தகைமைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஏனைய தொடர்புடைய தொழில்சார் தகைமைகள் (வங்கி ஒழுங்குமுறை இணக்கத்தில் உள்ள வேறு ஏதாவது தகைமைகள் விரும்பத்தக்கது.)

**வேலை அனுபவம்**

வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் ஒட்டுமொத்தமாக 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருப்பதுடன் அதில் குறைந்தது 05 ஆண்டுகள் முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அபேட்சகர் இணக்க செயற்பாட்டில் அனுபவம் மற்றும் முழுமையான அறிவு, ஒழுங்குமுறை இணக்கம், பணச்சலவை தடுப்பு நடைமுறைகள், கூட்டிணைந்த ஆளுகை மற்றும் நெறிமுறைகளில் போதுமான அறிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

சம்பள அளவு: ரூபா 211,260 - 5,490 x 12-277, 140 ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (வாழ்க்கைச் செலவுப்படி, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) மாதச் சம்பளம் ஏறத்தாழ 347,000.00 ரூபாவாகவிருக்கும்.

வயது: 50 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

## உதவி முகாமையாளர் - தரவுதள நிர்வாகம்
## Assistant Manager-Database Administration

**முக்கிய பொறுப்புகள்**

அனைத்து தரவுத்தள சேவையகங்களையும் அதன் சேவைகளையும் நிர்வகிப்பதற்கான பொறுப்புகூறல் மற்றும் வழக்கமான காப்புப்பிரதிகளை எடுப்பது, சமீபத்திய இணைப்புகளைப் பயன்படுத்துதல், செயற்றிறன் கண்காணிப்பு மற்றும் சரிசெய்தல். அனைத்து முக்கியமான தரவுத்தளங்களும் எந்த தடங்கலும் இல்லாமல் இயங்குவதை உறுதிசெய்து, சுமை சமநிலை, HA (அதிக கிடைக்கும்) மற்றும் DR (இடர் மீட்பு) நுட்பங்களுடன் அதிக கிடைக்கும் தன்மையை வழங்க வேண்டும். அனைத்து தரவுத்தள சேவையகங்களுக்கும் ஒழுங்குமுறை, இணக்கம் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும்.

**தகைமைகள்**

தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம்

தரவுத்தள முகாமைத்துவம் சார்ந்த தொழில்சார் சான்றழிப்புகள் மேலதிக தகைமையாகும்.

**அனுபவம்**

ஒட்டுமொத்தமாக 4 வருட அனுபவம் இதில் வங்கி மற்றும் நிதித் துறையில் தரவுத்தள நிர்வாகத்தில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் நிர்வாக நிலை. Postgre SQL/Enterprise DB வெளிப்பாடு இருப்பது சாதகமாகும்.

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 2024-09-23

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் சுய விபரங்களுடன் கல்வி/ தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண் என்பவற்றை பின்வரும் மின்னஞ்சல் ஊடாக அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்கள் Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.